தினமணி

# இன்றைய வேளாண் செய்திகள்

## வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் அரவை தொடக்கம்

வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 2013-14-ம் ஆண்டுக்கான கரும்பு அரவையை ஆட்சியர் இரா.நந்தகோபால் வெள்ளிக்கிழமை தொடங்கி வைத்தார்.

வேலூரை அடுத்த அம்முண்டியில் அமைந்துள்ள இந்த சர்க்கரை ஆலையில் 17 ஆயிரம் கரும்பு விவசாயிகள் உறுப்பினர்களாக உள்ளனர். நடப்பு ஆண்டு கரும்பு அரவைக்கு இவர்களில் 8 ஆயிரம் விவசாயிகள் பதிவு செய்துள்ளனர். இந்த அரவைப் பணி 4 மாத காலம் நடைபெறும். நடப்பாண்டில் 2 லட்சம் டன் சர்க்கரை உற்பத்தி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என ஆலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் மேலாண்மை இயக்குநர் எஸ்.பி.கார்த்திகா, கூட்டுறவு சங்க ஆலைத் தலைவர் ஏ.குமார் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## பஞ்சு, நூல் ஏற்றுமதிக்கு கட்டுப்பாடு நீடிக்க வேண்டும்: சைமா வலியுறுத்தல்

பஞ்சு, நூல் ஏற்றுமதிக்கான கட்டுப்பாடு நீடிக்கப்பட வேண்டும் என திருப்பூர் தென்னிந்திய பனியன் உற்பத்தியாளர்கள் சங்கம் (சைமா) வலியுறுத்தி உள்ளது.

இதுகுறித்து சைமா சங்கத் தலைவர் வைக்கிங் ஏ.சி.ஈஸ்வரன் வெள்ளிக்கிழமை வெளியிட்ட அறிக்கை:

பஞ்சு ஏற்றுமதியைக் கட்டுப்படுத்தி, உள்நாட்டு கைத்தறி, விசைத்தறி, பின்னலாடைகளுக்கான தேவைபோக மீதமுள்ள பஞ்சு மட்டும் ஏற்றுமதி செய்யப்பட வேண்டும். வெளிநாட்டு வர்த்தகத் துறை, பருத்தி, பருத்தி நூல் ஏற்றுமதிக்கு வழங்கி வந்த 3 சதவீதம் ஊக்கத் தொகையை கடந்த டிசம்பர் மாத இறுதியில் ரத்து செய்து மத்திய அரசு உத்தரவிட்டது.

இந்த உத்தரவு, பருத்தி சீசன் முடியும் தருவாயில் அமலுக்கு வந்ததால், பின்னலாடை உற்பத்தியாளாளர்கள் கொள்முதல் செய்யும் நூல் விலையில் உடனடியாக எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை. எனினும், சில தினங்களாக நூல் விலை சற்று குறைந்துவருவது வரவேற்கத்தக்கது.

தற்போது பருத்தி வரத்து துவங்கியுள்ள நிலையில், இந்திய பருத்தி கழகத்தின் மதிப்பீட்டின்படி, 2013-14 சீசனில் 360 லட்சம் பேல் வரை பருத்தி சந்தைக்கு வர வாய்ப்பு உள்ளது.

இந்த உத்தேச மதிப்பைக் கருத்தில் கொண்டு பஞ்சு, பருத்தி நூல் ஏற்றுமதிக்கு வழங்கி வந்த ஏற்றுமதிக்கான ஊக்கத் தொகையை மீண்டும் வா௦்த்தக அமைச்சகத்தில் இருந்து பெற்றுத்தர ஜவுளித் துறை அமைச்சர் முயற்சி செய்வது வருவதாகத் தகவல் வெளியாகி உள்ளது. இதனால் மீண்டும் உள்நாட்டு தேவையைக் கருத்தில் கொள்ளாமல் அதிகளவில் பஞ்சு ஏற்றுமதி செய்யப்படும் வாய்ப்பு உள்ளது.

உள்நாட்டு தேவையை கருத்தில் கொள்ளாமல் ஏற்றுமதிக்கு அனுமதியளித்தால், மீண்டும் நூல் விலை உயர வாய்ப்பு உள்ளது. இதன் காரணமாக, ஜவுளித்துறையின் ஒட்டுமொத்த தொழிலாளர்களின் வேலை வாய்ப்பும் கேள்விக்குறியாகிவிடும். மூலப்பொருள்களை ஏற்றுமதி செய்வதைவிட, உற்பத்தி செய்த பொருள்களை ஏற்றுமதி செய்தால்தான் வருவாய் பல மடங்காக உயரும்.

எனவே, இந்தப் பிரச்னையில் மத்திய அரசு உடனடியாகத் தலையிட்டு விவசாயிகளுக்கு கட்டுப்படியாகும் விலையை நிர்ணயம் செய்ய வேண்டும். உள்நாட்டு தேவைக்கான 280 லட்சம் பேல் பருத்தி வந்தபின் மீதியை, ஒட்டுமொத்தமாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு பதிலாக, மாதம்தோறும் 5 லட்சம் பேல்கள் மட்டும் ஏற்றுமதி செய்ய அனுமதி கொடுத்தால் பஞ்சு விலையும், நூல் விலையும் சீராக இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பாம்பன் பகுதியில் சூறாவளிக் காற்று**

பாம்பன் கடல் பகுதியில் பலத்த சூறாவளி காற்று வீசி வருகிறது. கடல் அலைகள் வேகமாக மோதுவதால், கரையோரப் பகுதிகளில் உள்ள மீன் நிறுவனங்கள் சேதமடைந்தன. இதனால் மீனவர்கள் பெரும் நஷ்டம் அடைந்துள்ளனர்.

வங்கக் கடலில் காற்றழுத்த தாழ்வு நிலை ஏற்பட்டுள்ளதால், பாம்பன் கடல் பகுதியில் கடந்த டிச.1 ஆம் தேதி முதல் பலத்த சூறாவளி காற்று வீசி வருகிறது. இதனால் மீன் பிடிக்க கடலுக்கு பெரும்பாலான மீனவர்கள் செல்லவில்லை. மீனவர்கள் தங்கள் விசைப் படகுகளை பாதுகாப்பான பகுதிகளில் நிறுத்தி வைத்துள்ளனர். கடலில் அலைகள் வேகமாக எழுவதால் கரையோரப் பகுதிகளில் இருக்கும் 100-க்கும் மேற்பட்ட மீன் கம்பெனிகளின் மேற்கூரைகள் பலத்த சேதமடைந்துள்ளன.

இதனால் மீனவர்களுக்கு ரூ.25 லட்சம் வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இந்த நிலையில், பாம்பன் பகுதியில் புயல் எச்சரிக்கை அறிவிக்கப்பட்டுள்ளதால், மீனவர்கள் அச்சத்துடன் காணப்படுகின்றனர்.

**கரூர் அருகே நோய் தாக்கி 2 மாடுகள் சாவு**

கரூர் அருகே மர்ம நோய் தாக்கி 2 மாடுகள் வெள்ளிக்கிழமை இறந்தன. இதுகுறித்து கால்நடை பராமரிப்புத் துறையினர் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

கரூர் அருகேயுள்ள உப்பிடமங்கலம் ரங்கம்பாளையத்தை சேர்ந்தவர் கருப்பண்ணன். இவர் கால்நடைகளை வளர்த்து வருகிறார். இவரது மாட்டுத் தொழுவத்தில் நின்றிருந்த பசு மாடு ஒன்றும், எருமை மாடு ஒன்றும் வெள்ளிக்கிழமை காலை திடீரென இறந்தன.

தகவலின்பேரில், கரூர் மாவட்ட கால்நடை பராமரிப்புத் துறையின் துணை இயக்குநர் ராஜேந்திரன் தலைமையில் மருத்துவர் சுதா மற்றும் மருத்துவக் குழுவினர் சம்பவ இடத்திற்கு சென்று மாடுகளை பிரேத பரிசோதனை செய்தனர்.

பின்னர், மாடுகள் இறந்த விதம் குறித்து ஆராய அந்த மாடுகளின் உறுப்புகளை அதிகாரிகள் எடுத்துச் சென்றனர்.

இதுகுறித்து மாவட்ட கால்நடை பராமரிப்புத் துறையின் இணை இயக்குநர் கோபிநாத் கூறுகையில், உப்பிடமங்கலத்தில் நோயால் பாதிக்கப்பட்டு இறந்த மாடுகளின் உள்ளுறுப்புகளை ஆய்வுக்காக அனுப்பியுள்ளோம். அதன் பின்னரே மாடு கோமாரி நோயால் இறந்ததா என்பது குறித்து தெரியவரும் என்றார்.

**சர்க்கரை ஆலையில் அரைவை தொடக்கம்**

கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை 2-ன் 17-வது பொதுஅரைவை வெள்ளிக்கிழமை தொடங்கி வைக்கப்பட்டது. ஆலை வளாகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற இதற்கான நிகழ்ச்சிக்கு தலைமை வகித்த தமிழக ஊரக தொழில்துறை அமைச்சர் ப.மோகன், ஆலை அரைவைப் பணியைத் தொடங்கிவைத்தார்.முன்னதாக, ஆலை வளாகத்தில் கணபதி பூஜை நடைபெற்றது. எம்எல்ஏ க.அழகுவேலு பாபு, தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் தலைவர் கே.ஜி.பி ஞானமூர்த்தி, ஒன்றியக் குழுத் தலைவர்கள் அ.ராஜசேகர், ப.இராஜேந்திரன், பேரூர்மன்றத் தலைவர் ம.வெங்கடேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆலையின் துணைத் தலைவர் மூ.கோவிந்தன், இயக்குநர்கள் வி.டி.இ.திருநாராயணன், ஜி.சத்தியமூர்த்தி, இரா.குருநாதன், ஆவின் கூட்டுறவு தலைவர் விஜயகுமார், ஆலையின் மேலாண்மை இயக்குநர் அ.க.சிவமலர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**கரும்பு விவசாயிகள் தில்லியில் டிச.12 ஆர்ப்பாட்டம்**

சர்க்கரை இறக்குமதிக்குத் தடை கோரி பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த கரும்பு விவசாயிகள் புது தில்லியில் டிசம்பர் 12-ஆம் தேதி ஆர்ப்பாட்டம் நடத்த உள்ளனர்.

இது குறித்து அனைத்துக் கரும்பு விவசாயிகள் சங்கங்களின் கூட்டமைப்புத் தலைவர் காசியண்ணன் கூறியது:

விவசாயத்திற்கு எதிராக மத்திய அரசு கடைப்பிடித்து வரும் கொள்கைகளால், சர்க்கரை ஆலைகளுக்கு கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இதனால், மகாராஷ்டிரம், கர்நாடகம், உத்தர பிரதேசம், தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களைச் சேர்ந்த கரும்பு விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கரும்பு சாகுபடி விவசாயிகளுக்கு சர்க்கரை ஆலைகள் பல கோடி ரூபாய் நிலுவை வைத்துள்ளன. நிகழ் அரவை ஆண்டில் (செப்டம்பர் 2013) 88 லட்சம் டன் சர்க்கரை, கிடங்குகளில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

மேலும், அடுத்த செப்டம்பர் 2014 அரவை ஆண்டின் இறுதியில் கிட்டங்களில் கூடுதலாக 15 லட்சம் டன்கள் இருப்பு இருக்கும் என்று பல்வேறு ஆய்வுகள் கூறுகின்றன. இதனால், அடுத்த ஆண்டு அக்டோபரில் சர்க்கரை இருப்பு 103 லட்சம் டன்களுக்கு மேல் இருக்கும்.

இச் சூழலில் சர்க்கரை இறக்குமதிக்கு மத்திய அரசு அனுமதி அளித்திருப்பதால் கரும்பு விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, உடனடியாக சர்க்கரை இறக்குமதிக்கு மத்திய அரசு தடை விதிக்க வேண்டும். பெட்ரோலுடன் கரும்பிலிருந்து தயாரிக்கப்படும் எத்தனாலை 25 சதவீதம் கலப்பதைக் கட்டாயமாக்க வேண்டும்.

இக் கோரிக்கைகளை வலியுறுத்தி புது தில்லியில் டிசம்பர் 12-ஆம் தேதி ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது. இதில் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த விவசாயிகள் பங்கேற்கின்றனர் என்றார் அவர்.

**ராசிபுரம் அருகே விவசாயிகளுக்கு துவரை நாற்று நடவுப் பயிற்சி**

ராசிபுரம் அருகேயுள்ள முத்துக்காளிப்பட்டியில் விவசாயிகளுக்கு துவரை நாற்று நடவு குறித்த பயிற்சி முகாம் அண்மையில் நடைபெற்றது.

இதற்கு ராசிபுரம் வேளாண்மை உதவி இயக்குநர் ஆர்.வருதராஜ் தலைமை வகித்தார். துவரையில் சொட்டுநீர்ப் பாசனம், நாற்று நடவு சாகுபடி தொழில்நுட்பம், மானியத் திட்டம் ஆகியவை குறித்து வேளாண் அதிகாரிகள் விவசாயிகளுக்குப் பயிற்சியளித்தனர்.

வேளாண்மை அலுவலர் பி.ஜெயமாலா, தோட்டக்கலை துணை அலுவலர் க.சுப்பிரமணியம், உதவி வேளாண்மை அலுவலர்கள் சங்கர், ரத்தினவேலு, பழனிவேலு, அட்மா தொழில்நுட்ப வல்லுநர்கள் ஸ்ரீதரன், பார்த்தீபன் உள்பட பலர் பங்கேற்றனர்.

முகாமில் விவசாயிகளுக்கு இடுபொருள்கள் வழங்கப்பட்டன.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

வாய்ப்புண் நோய்ஆடுகளுக்கு பரவுகிறது

ஆர்.கே.பேட்டை:மாடுகளை தொடர்ந்து, தற்போது ஆடுகளுக்கு, நோய் தாக்குதல் ஏற்பட்டு வருகிறது. .

ஆர்.கே.பேட்டை அடுத்த, பைவலசா கிராமத்தில் உள்ள, ஆடுகளுக்கு, வாய்ப்புண் நோய் பரவி வருகிறது. இந்நோய், ஆட்டுக்குட்டிகளை அதிகளவில் தாக்கி வருகிறது. இதுவரை பத்து ஆட்டுக்குட்டிகள் நோயால் பாதிக்கப்பட்டுள்ளன. இதற்கு, மஞ்சள் மற்றும் கடலை எண்ணெய் கொண்டு, விவசாயிகள் சிகிச்சை அளித்து வருகின்றனர்.இக்கிராமத்தில், 10க்கும் மேற்பட்ட ஆடுகளுக்கு, வாய்ப்புண் நோய் உள்ளதாக அப்பகுதி மக்கள் கூறுகின்றனர். இந்நோய், தீவிரமடையும் முன், அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என, அக்கிராம மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

கரும்பு அரவை துவக்கம்

வேலூர்: வேலூர் சர்க்கரை ஆலையில், கரும்பு அரவை துவங்கியது. வேலூர் மாவட்டம், அம்மூண்டியில் உள்ள வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில், கரும்பு அரவை துவக்க விழா, நேற்று நடந்தது. கலெக்டர் நந்தகோபால் அரவையை துவக்கி வைத்தார். விழாவில், சர்க்கரை ஆலை மேலாண்மை இயக்குனர் கார்த்திகா, கூட்டுறவு சங்க ஆலை தலைவர் குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## மல்பெரி செடியை தாக்கும் நோய் கட்டுப்படுத்த வழிமுறைகள்

திருவண்ணாமலை: பட்டு வளர்ப்பில், மல்பெரியை தாக்கும் நோய்களை தடுக்கும் வழிமுறைகள் உள்ளதாக, பட்டு வளர்ச்சித்துறை அலுவலர் வீரன் தெரிவித்தார். இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: மல்பெரியை தாக்கும் நோய்கள், பூச்சிகள் போன்றவற்றை முற்றிலும் தடுக்க முடியும். விவசாயிகள், மல்பெரியில் சிறிய பழுப்பு நிற புள்ளிகள், ஒழுங்கற்ற வடிவில் இலைகளை துளைத்திருக்கும். இது, இலைப்புள்ளி நோய் ஆகும். இதை கட்டுப்படுத்த, 0.2 சதவீதம் பெவிஸ்டின் தெளித்தால் போதும். மருந்து தெளித்த ஏழு நாட்களுக்கு பின், இலைகளை பறிக்க வேண்டும். மல்பரி செடியில், பழுப்பு நிறத்தில், இலையின் மேல் ஒட்டுகள் போல் காய்ந்து காணப்பட்டால், இலைத்துரு நோய் தாக்கியுள்ளதற்கான அறிகுறியாகும். இதை கட்டுப்படுத்த, 0.2 சதவீதம் காவாச் தெளிக்க வேண்டும். மருந்து தெளித்த, நான்கு நாட்களுக்கு பின் இலை பறிக்க வேண்டும்.

இதேபோல், வேர் அழுகல் நோயை கட்டுப்படுத்த, 5.10 கிராம் டைத்தேன், எம்-45யை வேர் பாகத்தில் தெளிப்பதுடன், பாதிக்கப்பட்ட செடிகளை அகற்றிவிட வேண்டும். இலை சுருட்டு புழு தாக்குதலை கட்டுப்படுத்த, 0.076 சதவீதம் டி.டி.வி.பி., வுடன், 0.5 சதவீதம் சோப்பு கரைசல் சேர்த்து தெளிக்க வேண்டும். இலைப்பேன் நோயை கட்டுப்படுத்த, மூன்று சதவீதம் வேப்ப எண்ணெய் மற்றும், 0.5 சதவீதம் காதி சோப் கரைசல் தெளிக்க வேண்டும். மேலும், மல்பெரி செடியில், டிசம்பர் மாதம் முதல் மார்ச் வரை, வெள்ளை ஈ பூச்சிகள் தாக்குதல் அதிகம் இருக்கும். இப்பூச்சிகள், இலையில் உள்ள சாறுகளை உறிஞ்சுவதால், இலையின் சத்து குறைந்து, மகசூல் குறையும். இதை கட்டுப்படுத்த, 0.05சதம் ரோகார் மற்றும், மூன்று சதவீதம் வேப்ப எண்ணெய் கலந்து தெளிக்க வேண்டும். மல்பெரி பயிரில் முன்னெச்சரிக்கையும், கவனிப்பும் இருந்தால், நோய் தாக்கும்போதே கட்டுப்படுத்திவிடலாம்.

நெற்பயிரில் இலைக்கருகல் நோய்: வேளாண் விஞ்ஞானிகள் குழு ஆய்வு



வடலூர்:குறிஞ்சிப்பாடி பகுதியில் நெற் பயிரில் இலைக் கருகல் நோய் தாக்கிய பயிரை விஞ்ஞானிகள் குழு ஆய்வு செய்தது.குறிஞ்சிப்பாடி பகுதியில் 12 ஆயிரத்து 500 ஏக்கர் பரப்பளவில் சம்பா நெல் நடவு செய்யப்பட்டுள்ளது.
குருவப்பன்பேட்டை, வரதராஜன்பேட்டை, கல்குணம், ரெட்டிபாளையம், அயன் குறிஞ்சிப்பாடி, பூதம்பாடி ஆகிய பகுதியில் 1,400 ஏக்கரில் நெல் நடவு செய்யப்பட்டுள்ளது.

நடவு செய்து 60 நாட்களைக் கடந்துள்ள நிலையில், நடவு செய்யப்பட்டிருந்த பி.பி.டி., வகை நெற் பயிரில் இலைகளின் இரு ஓரங்களும் மஞ்சள் நிறமாகி கருகத் தொடங்கி பின்னர் காயத் தொடங்கியது.இது வேகமாக பரவி வயல் முழுவதும் மஞ்சள் நிறமாக மாறி வந்தது. இந்த நெற்பயிரை விருத்தாசலம் வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் சரவணன், விஜயகீதா ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

இது குறித்து அவர்கள் தெரிவிக்கையில், "இந்த பி.பி.டி., வகை நெற்பயிர் ஆந்திராவில் விளையக்கூடிய நெல் வகை, இதற்கு நோய் எதிர்ப்பு சக்தி குறைவு. இதனால் இந்த பயிரில் அடிக்கடி நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்பு அதிகளவில்

உள்ளது.தற்போது ஏற்பட்டுள்ளது பாக்டீரியா இலைக் கருகல் நோய். இலை சுருட்டுப்புழு, புகையான் தாக்குதல் காணப்படுகிறது. பாக்டீரியா இலைக் கருகல் நோயைக் கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு 200 கிராம் காப்பர் ஹைட்ராக்சைடு மருந்தினை சரியாக 200 லிட்டர் தண்ணீரில் வேறு எந்த மருந்தையும் உடன் கலக்காமல் தனியாக கலக்க வேண்டும். கலந்த 200 லிட்டர் மருந்தினை பயிர் நனையும்படி அனைத்து மருந்தையும் தெளிக்க வேண்டும்.

மழை பொழிவு இல்லாத போது மருந்தினை தெளிக்க வேண்டும்@மலும், இலை சுருட்டுப்புழு தாக்குதலைக்கு ஒரு ஏக்கருக்கு 500 மி.லி., குளோரிபைரிபாஸ் மருந்தையும், புகையான் தாக்குதலைக் கட்டுப்படுத்த 60 மி.லி., இமிடாகுளோபிரிட் மருந்துந்தை ஒரு ஏக்கருக்கு தேவையான 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும் என ஆலோசனை தெரிவித்தனர்.குறிஞ்சிப்பாடி வேளாண்மை உதவி இயக்குநர் அப்பன்ராஜ், உதவி வேளாண் அலுவலர் தனசேகர், தெய்வசிகாமணி ஆகியோர் உடனிருந்தனர்.

கோமாரி தாக்கிய மாடுகளுக்கு சிகிச்சை

திருவெண்ணெய்நல்லூர்: திருவெண்ணெய்நல்லூர் அருகே கோமாரி தாக்கிய மாடுகளுக்கு தினமலர் செய்தி எதிரொலியால் தடுப்பூசி போடப்பட்டது.திருவெண்ணெய்நல்லூர் அடுத்த பெரியசெவலையை சேர்ந்த முத்துவேல் (32). இவர் வளர்த்து வரும் 5 மாடுகளுக்கு கோமாரி நோய் தாக்குதல் ஏற்பட்டது. இது குறித்து தினமலர் நாளிதழில் செய்தி வெளியானது. இதையடுத்து நேற்று காலை கால்நடைத்துறை அதிகாரிகள் பெரியசெவலையில் நோய் தடுப்பு நடவடிக்கையை மேற்கொண்டு மாடு வளர்ப்போர்களுக்கு தகுந்த அறிவுரைகள் மற்றும் மருந்துகளை வழங்கினர்.

குலசை பஞ்.,யில் மரக்கன்றுகள் நடும் விழா

உடன்குடி : உடன்குடி பஞ்., யூனியனுக்கு உட்பட்ட குலசேகரன்பட்டணம் பஞ்.,யில் 400 மரக்கன்றுகள் நடும் துவக்கவிழா குலசை கடற்கரையில் நடந்ததுமகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் 2013-14ம் ஆண்டில் மரக்கன்றுகள் நடும் பணியை குலசை பஞ்., துணைத்தலைவர் முத்துசாமி தலைமையில், உடன்குடி பஞ்.,யூனியன் சேர்மன் மல்லிகா முதல் மரக்கன்று நட்டி

துவக்கி வைத்தார்.உடன்குடி பஞ்., யூனியன் ஏபிடிஓ உலகநாதன் முன்னிலை வகித்தார். யூனியன் துணைச்சேர்மன் கல்லாமொழி ராஜதுரை,குலசை பஞ்., கவுன்சிலர்ள் மகாராஜன், குமாரவேல், சேக்அப்துல்காதர், சுப்பையா, யூனியன் இன்ஜினியர் பெனிஸ், யூனியன் மேற்பார்வையாளர் லதா, யூனியன் ரோடு ஆய்வாளர் ராஜேஷ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.தொடர்ந்து 400 கன்றுகள் நடப்பட்டன. ஏற்பாடுகளை குலசை பஞ்., செயலர் அப்துல்ரசாக் செய்திருந்தார்.
கடற்கரையை மீட்டெடுக்ககடல் நீரோட்டம் ஆய்வு
புதுச்சேரி: புதுச்சேரியில் மறைந்து போன கடற்கரையை மீட்டெடுப்பதற்காக, கடல் நீரோட்டத்தை ஆய்வு செய்யும் பணியினை அரசு முடுக்கிவிட்டுள்ளது.புதுச்சேரியில் துறைமுகம் ஏற்படுத்தப்பட்ட பிறகு கடுமையான கடல் அரிப்பு ஏற்பட்டு வருகிறது. கடற்கரை சாலையில், பரவி கிடந்த கடற்கரை மணல் முழுவதும் கடல் அரிப்பினால் காணாமல் போய், கருங்கற்கள் கொட்டப்பட்டுள்ளன. இதன் தாக்கம், வடக்கு பகுதியில் கடுமையாக எதிரொலித்து வருகிறது.கடல் அரிப்பினால், வம்பாகீரப்பாளையம், சோலை நகர், தந்திராயன் குப்பம், சின்ன முதலியார்வாடி, பெரிய முதலியார்சாவடி, பொம்மையார்பாளையம், சின்ன காலாப்பட்டு வரை 10 கி.மீ.தொலைவிற்கு கடற்கரை மணல் காணாமல் போய்விட்டது.
இதன் காரணமாக, கடலோர பாதுகாப்பு மேலாண்மை திட்டத்தை உலக வங்கி உதவியுடன் துவக்கி, மறைந்துபோன கடற்கரை மீட்டெடுக்க அரசு முடிவு செய்துள்ளது.
இதுதொடர்பாக, அறிவியல் தொழில்நுட்பத் துறை, நேஷனல் இன்ஸ்டியூட் ஆப் ஓஷன் டெக்னாலஜி தொழில்நுட்ப குழுவினர் கடல் அலை நீரோட்டம் குறித்து ஆய்வு நடத்தினர். நேற்று, தலைமை செயலக மேல் மாடியில் நவீன கருவிகளை பொருத்தி கடல் நீரோட்டத்தை பதிவு செய்தனர்.இது குறித்து தொழில்நுட்ப வல்லுநர்கள் கூறுகையில், ""கடல் நீரோட்டம் கண்காணிக்கப்பட்டு, அது தொடர்பாக ஆய்வறிக்கை அரசிடம் சமர்ப்பிக்கப்படும். அதனடிப்படையில் கடலோர பாதுகாப்பு மேலாண்மை திட்டம் கொண்டுவரப்பட்டு, கடற்கரை பாதுகாக்கப்படும்'' என்றனர்.

விவசாயிகள் கூட்டம்

தாண்டிக்குடி: பன்றிமலையில் கீழ்பழநி மலை விவசாயிகள் கூட்டம் நடந்தது. ஊராட்சி தலைவர் கிருஷ்ணமூர்த்தி வரவேற்றார். முன்னாள் ஒன்றிய தலைவர் மங்களராஜ் தலைமை வகித்தார். விவசாயிகள் பாதுகாப்பு சங்கம் ஏற்படுத்துதல், பன்றிமலையில் உள்ள யானைகளை விரட்ட கும்கி யானையை வரவழைத்தல், வனவிலங்குளால் ஏற்படும் உயிர் சேதத்திற்கு ரூ.3 லட்சத்தை ரூ.10 லட்சமாக அறிவிக்கவேண்டும் என்பது உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

உணவு தானிய உற்பத்தியில் பின்னடைவு சமாளிக்க பண்ணை பள்ளிகள் துவக்கம்

திண்டுக்கல்:உணவு தானிய உற்பத்தி இலக்கினை நிறைவு செய்வதற்காக, பண்ணை பள்ளிகளை துவக்கி விவசாயிகளுக்கு பயிற்சி அளிப்பதற்கான முயற்சியில் வேளாண்மை துறையினர் ஈடுபட்டுள்ளனர். தமிழகத்தில் சாகுபடி பரப்பு ஆண்டுதோறும் குறைந்து வருவது, வேளாண்மை துறையினர் நடத்திய ஆய்வுகளின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தண்ணீர் பற்றாக்குறை, மின்தடை, கூலியாட்கள் கிடைக்காதது ஆகிய காரணங்களால் பலர் விளை நிலங்களை விற்றுள்ளனர். இவை வீட்டுமனைகளாக மாறிவிட்டன. இதனால், உணவு பொருள் உற்பத்தி குறைந்ததோடு, விலை உயர்வும் ஏற்பட்டுள்ளது. வரும்காலங்களில் பற்றாக்குறையை சமாளிப்பதற்காக, பல்வேறு புதிய திட்டங்கள், மானியங்கள் அறிவிக்கப்பட்டிருப்பதோடு, அனைத்து மாவட்டங்களும் உணவு தானிய உற்பத்தி இலக்கினை பூர்த்தி செய்ய வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு பகுதியிலும் உள்ள தேவைகளை அறிந்து அதற்கேற்ற பயிர்களை விளைவிப்பதற்கான விழிப்புணர்வை விவசாயிகளுக்கு ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் துவக்கப்பட்டுள்ளன. காய்கறி நாற்றுகளை எளிய முறையில் பயிரிட்டு மகசூலை பெறுவது எப்படி என்பதை தெரிந்து கொள்வதற்காக, வெளிமாநிலங்களில் உள்ள பண்ணைகளுக்கு விவசாயிகள் அழைத்து செல்லப்பட்டு நேரடி விளக்கத்தினை பெறும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இதற்கான பண்ணை பள்ளிகள் தற்போது அனைத்து மாவட்டங்களிலும் துவக்கப்பட்டுள்ளன. வேளாண்மை துறையோடு, அதை சார்ந்த

பிறதுறைகளான வணிகம், கால்நடை, தோட்டக்கலை, பட்டு வளர்ப்பு, மீன்வளத்துறைகளும் பங்கேற்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வங்கக்கடலில் புயல் சின்னம் "1 ம் எண்' எச்சரிக்கை கூண்டு

ராமேஸ்வரம்: வங்கக்கடலில் புதிய புயல் சின்னம் உருவாகியதால், பாம்பன் துறைமுக அலுவலகத்தில், "1 ம் எண்' புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டது. சென்னையில் இருந்து தென் கிழக்கில், 530 கி.மீ., ல், வங்க கடலில் உருவாகிய புதிய காற்றழுத்த தாழ்வு மண்டலம், புயலாக உருவாகி, தமிழகம் நோக்கி நகர்ந்து வருகிறது. "கடலோர மாவட்டங்களில் பலத்த காற்றுடன் மழை பெய்ய கூடும்' என, வானிலை மையம் அறிவித்தது. இதனால், தொலை தூர புயல் எச்சரிக்கையாக, பாம்பன் துறைமுக அலுவலகத்தில், "1 ம் எண்' புயல் எச்சரிக்கை கூண்டு, நேற்று ஏற்றப்பட்டது. இதன் மூலம், "கடலில் காற்றுடன் மழை பெய்யும். எச்சரிக்கையுடன் மீனவர்கள் மீன்பிடிக்க செல்ல வேண்டும்' என, அறிவுறுத்தப்பட்டது.

வறட்சியால் பாதித்த நெற்பயிருக்கு இழப்பீடு இல்லை: விவசாயிகள் புகார்

சிவகங்கை: கல்லலில், வறட்சி பாதித்த பயிர் குறித்த கணக்கெடுப்பு நடத்தாததால், இழப்பீடு கிடைக்கவில்லை என,விவசாயிகள் கலெக்டரிடம் புகார் அளித்தனர். காரைக்குடி தாலுகா, கல்லல் பிர்க்காவிற்குட்பட்ட அரண்மனைசிறுவயல், கீழப்பூங்குடி, மாலைகண்டான், வெற்றியூர், இளங்குடி, பிளார் உள்ளிட்ட கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் கடந்த ஆண்டு,(2012-13) வயல்களில் நெல் நடவு செய்திருந்தனர். பருவ மழை பொய்த்துவிட்டதால், விளையும் தருவாயில் நெற்பயிர்கள் காய்ந்துவிட்டன.

வறட்சி பாதித்த நெற்பயிர்களுக்கு, இழப்பீடு வழங்க, வருவாய்துறையினர், நிலங்களில் கணக்கெடுப்பு நடத்தினர். ஆனால், கல்லல் பிர்க்காவிற்குட்பட்ட, இந்த கிராமங்களில் நெற்பயிர் பாதிப்பு குறித்து, கணக்கெடுக்காமல் விட்டுவிட்டனர். இதனால், இங்கு, வறட்சி பாதிப்பு இல்லை எனக்கூறி, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, இழப்பீடு வழங்கவில்லை. பாதிக்கப்பட்ட விவசாயிகள் பல முறை, வருவாய்துறையினரிடம் முறையிட்டும், இழப்பீடு கிடைக்கவில்லை.

இதையடுத்து, சிவப்பு நட்சத்திர மக்கள் இயக்க, விவசாய பிரிவு தலைவர் ஆதிமூலம், தலைமையில் விவசாயிகள் , கலெக்டர் ராஜாராமனை சந்தித்து, மனு அளித்தனர். இது குறித்து, உரிய நடவடிக்கை எடுப்பதாக கலெக்டர் தெரிவித்ததையடுத்து, விவசாயிகள் திரும்பி சென்றனர்.

கோமாரியால் பால் உற்பத்தியில் தமிழகம் பின்னடைவு :விலையில்லா மாடுகள் வழங்கி ஈடுகட்டுமா அரசு

மேட்டூர்: பால் உற்பத்தியில் இந்தியாவில், எட்டாவது இடத்தில் இருக்கும் தமிழகத்தில், கோமாரி நோய் பாதிப்பால், மாடுகள் உயிரிழந்ததால், பால் உற்பத்தியில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. மாடுகளை இழந்த விவசாயிகளுக்கு விலையில்லா மாடு வழங்கி பால்வளத்தை பெருக்க விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழகத்தில், ஒரு கோடியே, 12 லட்சம் மாடுகள் வளர்க்கப்படுகிறது. மேலும், பால் உற்பத்தியில், தமிழகத்தில் ஈரோடு மாவட்டம் முதலிடத்தில் உள்ளது.

திருநெல்வேலி, சேலம் உள்ளிட்ட மாவட்டங்கள் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன. கடந்த, 2012-13ம் ஆண்டில், தமிழகத்தில் நாள் ஒன்றுக்கு, 1.82 கோடி லிட்டர் பால் உற்பத்தி செய்யப்பட்டது.

இதனால், இந்தியாவின் பால் உற்பத்தியில், தமிழகம் எட்டாவது இடத்தில் உள்ளது. பால் உற்பத்தியை பெருக்கி, இந்தியாவில் முன்னணி இடத்தை பிடிக்க, தமிழக அரசு திட்டமிட்டது. இதற்காக, அ.தி.மு.க.,அரசு கடந்த இரண்டு ஆண்டாக விவசாயிகளுக்கு விலையில்லா மாடு மற்றும் ஆடுகள் வழங்கியது.

இதில், பால் உற்பத்தி அதிகமுள்ள, சேலம், ஈரோடு, நெல்லை உள்ளிட்ட சில மாவட்டங்களில் விலையில்லா மாடுகளுக்கு பதிலாக ஆடுகள் அதிக அளவில் வழங்கப்பட்டது. பால் உற்பத்தி குறைவாக உள்ள மாவட்டங்களில் உள்ள விவசாயிகளுக்கு மட்டுமே விலையில்லா மாடுகள் வழங்கப்படுகிறது.

இந்நிலையில், மாநிலம் முழுவதும் கால்நடைகளை கோமாரி நோய் தாக்கியது. நோயை கட்டுப்படுத்த கால்நடைத்துறை தீவிர முயற்சி மேற்கொண்ட போதிலும், கடந்த இரு மாதங்களாக மாநிலம் முழுவதும், 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாடுகள், கோமாரி நோய்க்கு பலியாகி விட்டது. இதனால், தமிழத்தில் தினமும், 30

லட்சம் லிட்டர் பால் உற்பத்தி பாதித்துள்ளது.

மேலும், பசுக்களுக்கு பரவிய கோமாரி நோய் கன்றுகளை தாக்கியதால், ஏராளமான கன்றுகள் தாய் பசுக்களின் வயிற்றிலும், பிறந்த சில மாதங்களிலும் பலியாகியுள்ளன. இதனால், வருங்காலத்தில் பால் உற்பத்தி மேலும் குறையும் நிலை உருவாகியுள்ளது.

எனவே, பால் உற்பத்தியில் இந்தியாவில் எட்டாவது இடத்தில் இருக்கும், தமிழகத்துக்கு கோமாரி நோய் பரவல் காரணமாக பின்னடைவு ஏற்பட்டுள்ளது. மேலும், பால் உற்பத்தியில் முன்னணியில் உள்ள சேலம், ஈரோடு மாவட்டங்களில், கோமாரி நோய்க்கு மாடுகளை பறிகொடுத்த விவசாயிகள், கடுமையான நஷ்டம் காரணமாக, மீண்டும் மாடுகளை வாங்கி வளர்க்க தயக்கம் காட்டுகின்றனர். இதனால், பால் உற்பத்தியில் முன்னணியில் உள்ள மாவட்டங்களும் வரும்காலத்தில் பின்னுக்கு செல்லும் அபாயமும் உள்ளது. மாடுகள் பலியானதால் தங்களுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும் என, பல்வேறு மாவட்ட விவசாயிகள் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்நிலையில், பால் உற்பத்தியில் முன்னணியில் உள்ள மாவட்டங்களில், பலியான மாடுகளால் குறையும் பால் உற்பத்தியை அரசு ஈடுகட்ட வேண்டும். இதற்காக கால்நடைகளை பறிகொடுத்த விவசாயிகளுக்கு, அரசு முன்னுரிமை கொடுத்து, விலையில்லா மாடு வழங்கவும், நஷ்டஈடு வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## உணவு தானிய உற்பத்தியில் பின்னடைவு: சமாளிக்க பண்ணை பள்ளிகள் துவக்கம்

திண்டுக்கல்: உணவு தானிய உற்பத்தி இலக்கினை நிறைவு செய்வதற்காக, பண்ணை பள்ளிகளை துவக்கி விவசாயிகளுக்கு பயிற்சி அளிப்பதற்கான முயற்சியில் வேளாண்மை துறையினர் ஈடுபட்டுள்ளனர்.

தமிழகத்தில் சாகுபடி பரப்பு ஆண்டுதோறும் குறைந்து வருவது, வேளாண்மை துறை நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது. தண்ணீர் பற்றாக்குறை, மின்தடை, கூலியாட்கள் கிடைக்காதது ஆகிய காரணங்களால் பலர் விளை நிலங்களை விற்று, வீட்டுமனைகளாக மாறிவிட்டன. இதனால், உணவு பொருள் உற்பத்தி குறைந்ததோடு, விலை உயர்வும் ஏற்பட்டுள்ளது. வரும்காலங்களில் பற்றாக்குறையை சமாளிப்பதற்காக, பல்வேறு புதிய திட்டங்கள், மானியங்கள் அறிவிக்கப்பட்டிருப்பதோடு, அனைத்து மாவட்டங்களும் உணவு தானிய உற்பத்தி இலக்கினை பூர்த்தி செய்ய வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு பகுதியிலும் உள்ள தேவைகளை அறிந்து, அதற்கேற்ற பயிர்களை விளைவிப்பதற்கான விழிப்புணர்வை விவசாயிகளுக்கு ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் துவக்கப்பட்டுள்ளன. காய்கறி நாற்றுகளை எளிய முறையில் பயிரிட்டு மகசூலை பெறுவது எப்படி என்பதை தெரிந்து கொள்வதற்காக, வெளிமாநிலங்களில் உள்ள பண்ணைகளுக்கு விவசாயிகள் அழைத்து செல்லப்பட்டு நேரடி விளக்கத்தினை பெறும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இதற்கான பண்ணை பள்ளிகள், தற்போது அனைத்து மாவட்டங்களிலும் துவக்கப்பட்டுள்ளன. வேளாண்மை துறையோடு, அதை சார்ந்த பிறதுறைகளான வணிகம், கால்நடை, தோட்டக்கலை, பட்டு வளர்ப்பு, மீன்வளத்துறைகளும் பங்கேற்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

காய்கறி பயிர்களுக்கு மூடாக்கு விவசாயிகளுக்கு யோசனை

பொள்ளாச்சி : விவசாயிகள் காய்கறி பயிர்களுக்கு மூடாக்கு அமைப்பதன் மூலம், குறைந்த நீர் பாசனம், குறைந்த களை உள்ளிட்ட பல நன்மைகளை அடையலாம் . பொள்ளாச்சி பகுதிகளில், மழையின்மை காரணமாக தென்னை விவசாயம் தொய்வடைந்து காணப்படுகிறது. கடந்த சில ஆண்டுகளாக நிலவிய பாசனப்பற்றாக்குறை, தேங்காய் விலை வீழ்ச்சி ஆகிய காரணங்களால், விவசாயிகள் மாற்றுப்பயிர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகின்றனர். அதில், குறுகிய காலப்பயிர்களான, காய்கறி பயிர்கள் விவசாயிகளை அதிகம் கவர்ந்துள்ளது. இருக்கும் குறைந்த நீரைக்கொண்டு பாசனம் செய்து, அதிக மகசூல்; லாபம் அடையும் வழி

முறைகளை விவசாயிகள் கையாளத்துவங்கியுள்ளனர்.

சொட்டு நீர்பாசன முறையில் பாசனம் செய்தல், அதில் நீர் வழி உரங்களை கலந்து பயிர்களுக்கு

தருதல், வளர்ச்சி ஊக்கிகளை பயன்

படுத்துதல் ஆகிய வழிமுறைகளை பெரும்பாலான விவசாயிகள் கையாள்கின்றனர். இதில், சொட்டு நீர் பாசனம் அமைக்க, அரசு மானியம் அளித்து வருகிறது. பயிர் களுக்கு பாசனம் செய்யும் நீரின் பெரும் பகுதி, காற்றில் ஆவியாவதால், நீர் விரையமாகிறது. மேலும், பயிர்களின் அடியில், தேவையற்ற களைகள் முளைத்து, பயிருக்கு கொடுக்கப்படும் உரம் மற்றும் பாசனத்தை பெருமளவு உறிஞ்சுவதால், பயிர்களுக்கு பற்றாக்குறை

ஏற்படுகிறது. இதைத்தடுக்க, செடிகளின் வேர்பகுதிகளில், செயற்கை மூடாக்கு அமைக்கலாம். இதற்கான பாலித்தீன் ஷீட்டுகள், கடைகளில் விற்கப்படுகின்றன. மூடாக்கு அமைப்பதால், நீர் ஆவியாதல் பெருமளவு தடுக்கப்படுகிறது. எனவே, குறைந்த அளவு பாசனம் செய்தால் போதுமானது.

மேலும், பயிர்களின் அடியில் களைகள் வளர்வதும் தடுக்கப்படுகிறது. இதனால், களை எடுக்கும் செலவும் மிச்சமாகிறது. பயிருக்கு மண்ணிலிருந்து முழுமையான சத்துகள் கிடைக்கும். கொடுக்கும் உரங்களும் வீணாகாது. எனவே, உரச்செலவும் குறையும்.

இப்படி பல வகையில் நன்மைகள் தரும் மூடாக்கு அமைக்கும் தொழில்நுட்பத்தை, அனைத்து விவசாயிகளும் அமைத்து பயன்பெறலாம்.யாரை அணுகுவது?காய்கறி பயிர்களுக்கு மூடாக்கு அமைக்க, தோட்ட கலை துறையின் மூலம், 50 சதவீதம் வரை மானியம் அளிக்கப்படுகிறது. மானியம் வேண்டும் விவசாயிகள், சிட்டா, ரேஷன்கார்டு, 3 புகைப்படங்கள் மற்றும் மூடாக்கு வாங்கியதற்கான ரசீது ஆகியவற்றுடன் தோட்டக்கலைத்துறை அலுவலகத்தை அணுகலாம்.

பப்பாளியில் மாவுப்பூச்சி கட்டுப்படுத்த "அட்வைஸ்'

ராசிபுரம்: "பாப்பாளியில் மாவுப்பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த, வேம்பு மருந்து தெளித்து பயன்பெறலாம்' என, வெண்ணந்தூர் வட்டார வேளாண் உதவி இயக்குனர் சீனிவாசன் தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்டுள்ள

அறிக்கை:வெண்ணந்தூர் வட்டாரத்தில், தற்போது பப்பாளி மாவுப்பூச்சியின் தாக்குதல் தொடங்கியுள்ளது. விவசாயிகள், பொருளாதார சேதாரத்திற்கு முன், இப்பூச்சியைக் கட்டுப்படுத்த, அசாடிராக்டின், மூன்று சதவீதம் (வேம்பு மருந்து) மருந்தை, 25 மி.லி., ஒரு வாளி நீரில் கலந்து, காலை அல்லது மாலையில், இலை, தழை, தண்டுப் பகுதிகள் நன்கு நனையும்படி தெளிக்கலாம். இவ்வேம்பு மருந்து, வெண்ணந்தூர் வேளாண் விரிவாக்க மையம் மற்றும் அத்தனூர் துணை வேளாண் விரிவாக்க மையங்களை அணுகி மானியத்துடன் அசாடிராக்டின் பெற்று, விவசாயிகள் பயன் பெறலாம். தற்போதைய சூழ்நிலையில், பப்பாளி மாவுப்பூச்சியின் தாக்கம் தென்படுகிறது.

மேலும், வெயிலின் தாக்கம் அதிகரிக்கும் போது, பூச்சியின் எண்ணிக்கை அதிகரித்து, பயிரினை பாதிக்கும். எனவே, தற்போதே அசாடிராக்டின், மூன்று சதவீதம் தெளித்து பயனடையலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது

வெள்ளிச் சந்தையில் பூ விற்பனை மையம் அமைக்க கோரிக்கை : உரிய விலை கிடைக்கும் என விவசாயிகள் எதிர்பார்ப்பு

தர்மபுரி: வெள்ளிச் சந்தையில், அரசு சார்பில், பூ விற்பனை மையம் அமைக்க வேண்டும் என, விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தர்மபுரி மாவட்டம், விவசாயத்தை பிரதானமாக கொண்ட மாவட்டம் ஆகும். மாவட்டத்தில், மா, நெல், கரும்பு. மஞ்சள் உள்ளிட்ட பயிர்கள், பாசன வசதியிலும், மரவள்ளி, பருத்தி, துவரை உள்ளிட்ட பயிர்கள், மானாவாரியாகவும், கடந்த காலங்களில், அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டு வந்தது.

பல நேரங்கள், விளைச்சல் அதிகரித்த போதிலும், விளைபொருட்களுக்கு, அரசு போதிய விலை நிர்ணயம் செய்யாத காரணத்தால், விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டு வந்தனர்.

இதையடுத்து, தர்மபுரி மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள், குறைந்த பாசன வசதி மற்றும் போதிய விலை கிடைக்கும் மலர்களை சாகுபடி செய்யத் துவங்கினர். இதனால், மலர் சாகுபடியில், தென்மாவட்டங்களுக்கு அடுத்தபடியாக, வட மாவட்டங்களில், தர்மபுரி, கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில், மல்லி, முல்லை,

சாமந்தி, செண்டு மல்லி, சம்மங்கி உள்ளிட்ட மலர் வகைகளை, விவசாயிகள் குறிப்பிட்ட அளவு சாகுபடி செய்யத் துவங்கினர்.

குறிப்பாக, திருமண சீஸன் நேரங்களான வைகாசி, ஆனி, ஆவணி, ஐப்பசி, கார்த்திகை, தை, மாசி, பங்குனி ஆகிய மாதங்களில், மலர்களை சாகுபடி செய்த விவசாயிகள், அதிக லாபம் ஈட்டி வந்தனர்.

மேலும், அருகில் உள்ள கார்நாடகா மாநிலத்துக்கு, ஆண்டு முழுவதும், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் இருந்து, மலர், விற்பனைக்கு அனுப்பட்டு வருவதால், மலர் சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு, ஓரளவுக்கு, வருவாய் கிடைத்து வருகிறது.

எனினும், தற்போது இடைத்தரகர்கள் மூலம் மலர்கள் விற்பனை செய்து வருவதால், மலர்கள் சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு, உரிய விலை கிடைக்காத நிலை உள்ளது.

குறிப்பாக, தர்மபுரி மாவட்டம் பாலக்கோடு, மாரண்டஹள்ளி, பஞ்சப்பள்ளி ஆகிய பகுதிகளில், 500 ஏக்கருக்கு மேல் சாமந்தி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இங்கு விளையும் சாமந்தி பூ உள்பட அனைத்து மலர்களும், தர்மபுரியில் உள்ள பூ மார்க்கெட்டுக்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து, பெங்களூருக்கு விற்பனைக்கு கொண்டு செல்வாதல், விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்காத நிலை ஏற்பட்டு வருகிறது.

எனவே, தமிழக அரசு சார்பில், பாலக்கோட்டை அடுத்த வெள்ளிச்சந்தையில், பூ விற்பனை மையத்தை துவங்கி, மலர் சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு, உரிய விலை கிடைக்க வழிவகை செய்ய வேண்டும் என, விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது குறித்து, சாமந்தி பூ சாகுபடி செய்துள்ள விவசாயிகள் கூறியதாவது:

பாலக்கோடு, மாரண்டஹள்ளி உள்ளிட்ட பகுதிகளில், 300 ஏக்கருக்கு மேல் சாமந்தி பூ சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் விளையும் சாமந்தி பூக்கள், நெருக்கமாகவும், அடர்த்தியாகவும் உள்ளதால், பெங்களூரில், மலர் அலங்காரம் செய்யும் வியாபாரிகள், அதிகளவில், இப்பகுதிகளில் விளையும் மலர்களை வாங்குவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

ஆனால், பெங்களூருக்கு அருகில் இருந்தும், இப்பகுதியில் மலர் விற்பனை மையம் இல்லாததால், விவசாயிகள், இப்பகுதியில் விளையும் மலர்களை, தர்மபுரி பூ மார்க் கெட்டிற்கு கொண்டு செல்லும் நிலை உள்ளது.
இதனால், விசாயிகளுக்கு கூடுதல் செலவு ஏற்படுவதுடன், மார்க்கெட்டில் இடைத்தரகர்களால் செய்யப்படும் விலை நிர்ணயத்தால், போதிய விலை கிடைக்காத அவல நிலை உள்ளது.
எனவே, தமிழக அரசு சார்பில், சாமந்தி உள்ளிட்ட மலர்கள் அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டு வரும் பென்னாகரம், பாலக்கோடு, மாரண்டஹள்ளி, பஞ்சப்பள்ளி ஆகிய பகுதிகளை மையமாக வைத்து, வெள்ளச்சந்தையில், மலர் விற்பனை மையம் துவங்க வேண்டும்.
இவ்வாறு அவர்கள் கூறினர்.
பசுந்தேயிலைக்கு குறைந்தபட்ச விலை நிர்ணயிக்க வலியுறுத்தல்
பந்தலூர்:"பசுந்தேயிலைக்கு குறைந்தபட்ச விலையாக 25 ரூபாய் நிர்ணயிக்க வேண்டும்' என, வலியுறுத்தப்பட்டுள்ளது.பந்தலூர் அருகே பிதர்காடு கூட்டுறவு தேயிலை தொழிற்சாலையின் உறுப்பினர்கள் சங்க கூட்டம் நடந்தது. ஜோசப் வரவேற்றார். தலைவர் மாதப்பா தலைமை வகித்தார்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:பசுந்தேயிலைக்கு குறைந்தபட்ச விலையாக 25 ரூபாய் நிர்ணயிக்க வேண்டும்; தொழிற்சாலை உலர்கள பணியை விரைவாக முடிக்கவும், தவறு செய்யும் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்; இன்கோசர்வ் அதிகாரிகள் தன்னிச்சையாக பணியில் அமர்த்திய பணியாளர்களை உடனடியாக வேறு இடங்களுக்கு மாற்றம் செய்ய வேண்டும்; தற்போது பணியாற்றும் தொழிலாளர்கள், பணியாளர்களுக்கு நியாயமான ஊதியமும், தகுதியுடையவர்களை பணி உயர்வும் செய்ய வேண்டும் உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

]பசுமை திட்டத்தில் மரம் வளர்க்க திருச்சி மாநகராட்சி அழைப்பு

திருச்சி: மூன்றாயிரம் ரூபாய் செலுத்தி பசுமை திட்டத்தில் மரம் வளர்க்க திருச்சி மாநகராட்சி அழைப்பு விடுத்துள்ளது. இதுகுறித்து திருச்சி மாநகராட்சி கமிஷனர் தண்டபாணி வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் கூறியிருப்பதாவது:திருச்சி மாநகராட்சி நிர்வாகம் சார்பில் பசுமை திட்டம் துவங்கப்பட்டுள்ளது. இதில், பஞ்சப்பூர் பகுதியில் மதுரை - சென்னை தேசிய நெடுஞ்சாலையை ஒட்டி மாநகராட்சிக்கு சொந்தமான 5 ஏக்கர் பரப்பளவில் நிலம் உள்ளது.

இங்கு நகர்புற பசுமை காடுகள் திட்டத்தின் கீழ் மரக்கன்றுகள் நடப்பட்டு மாநகராட்சியால் பராமரிக்கப்படவுள்ளது. இப்பணிக்கு மரம் ஒன்றுக்கு 3 ஆயிரம் ரூபாய் வீதம் மக்கள் பங்களிப்பாக பெறப்பட்டு, இந்த நிதியை மூலதனமாக கொண்டு பராமரிப்பு பணிக்கு பயன்படுத்தப்படவுள்ளது. இந்த திட்டத்தின் மூலம் மாநகாட்சியை பசுமையான திருச்சியாக மாற்றிடவும், சுற்றுசூழலை பாதுகாத்திடவும் மாநகர மக்களின் பங்களிப்பை மாநகராட்சி நிர்வாகம் எதிர் நோக்கியுள்ளது. இத்திட்டத்திற்கு தங்களது ஆதரவினை வழங்கி தங்களது உற்றார் உறவினர் நண்பர்களிடம் எடுத்துக் கூறி அவர்களையும் இத்திட்டத்தில்பங்கேற்க செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.இத்திட்டம் குறித்து பள்ளி, கல்லூரி, மருத்துவமனை, பட்டய கணக்கர், டாக்டர்கள், வக்கீல்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், சமூக அமைப்புகள் வணிக பேரவைகள், வங்கி நிறுவனங்கள், பொறியாளர் குழுமங்கள், அனைத்து அரசு துறை உயர் அலுவலர்கள் ஆகியோருக்கு எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

எனவே, மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த புதிய பசுமை திட்டத்தில் தாங்களும் பங்கேற்று உரிய படிவத்தில் விபரங்களை பூர்த்தி செய்து மரக்கன்று ஒன்றினை பராமரிப்புத் தொகைக்கான வங்கி டி.டி.,யை ஆணையர், திருச்சி மாநகராட்சி என்ற பெயரில் அனுப்பி, தங்களது பங்கேற்பினையும், ஒத்துழைப்பையும் வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பசும்பால் லிட்டருக்கு ரூ.25 தரணும் விவசாய சங்க மாநாட்டில் தீர்மானம்'

மணப்பாறை: தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மணப்பாறை தாலுகா மாநாட்டில், பல்வேறு முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மணப்பாறையில், தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் 17வது தாலுகா மாநாடு எம்.எஸ்.நாடார் மஹாலில் நடந்தது. தாலுகா தலைவர் தங்கராசு தலைமை வகித்தார். ஆனாம்பட்டி பால்கூட்டுறவு சங்கத்தலைவர் ராமசாமி, முத்தபுடையான்பட்டி, கூட்டுறவு சங்க இயக்குனர் பெருமாள் முன்னிலை வகித்தனர். விவசாய சங்கத்தின் மாநில தலைவர் எம்.எல்.ஏ., குணசேகரன், மாநில துணைச்செயலாளர் இந்திரஜித், மாவட்ட செயலாளர் அயிலை சிவசூரியன் சிறப்புரையாற்றினர். மாநாட்டில், மணப்பாறையில் சிப்காட் மற்றும் காகித ஆலைக்காக, 2,500 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட உள்ளது. அரசு தொழில் துறைகளை வளர்க்கவேண்டும். அதே நேரத்தில் விவசாயம் பாதிக்கப்படக்கூடாது. தமிழக அரசு விவசாய நிலங்களை கையகப்படுத்துவதை விடுத்து, தரிசு நிலங்களை கையகப்படுத்த வேண்டும். எடுக்கப்படும் நிலங்களுக்கு, நான்கு மடங்கு கூடுதலாக நஷ்டஈடு வழங்கவேண்டும். நிலம் கொடுப்பவர்களுக்கு வீட்டிற்கு ஒருவருக்கு வேலைவாய்ப்பும் வழங்கவேண்டும். கோமாரி நோயால் இறந்த மாடுகள் குறித்து, எல்லா மாவட்டங்களிலும் முறையான கணக்கீடு எடுத்து, மாடுகளை பறிகொடுத்த விவசாயிகளுக்கு முழு இழப்பீட்டுத்தொகை அரசு வழங்கவேண்டும். கடந்த ஆண்டுபோல இந்த ஆண்டும் வறட்சி நிலை நீடிக்கிறது. வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் அல்லது மாற்று வேலை திட்டத்திற்கான முறையான ஏற்பாடுகளையும் செய்ய, முன்கூட்டியே திட்ட மதிப்பீடுகளையும், நிதி ஆதாரங்களையும் திரட்டுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் தமிழக அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். மணப்பாறை, மருங்காபுரி, வையம்பட்டி ஒன்றிய பகுதிகளில் கிணறுகளை ஆழப்படுத்தவும், அடிக்கிணறு வெட்டவும், கூட்டுறவு வேளாண்மை வங்கி மூலம் கடன் வசதி அளிக்கவேண்டும், கால்நடைகளுக்கு மானிய விலையில் தீவனங்களும், பசும்பால் லிட்டருக்கு, 25 ரூபாயும், எருமைப்பாலுக்கு, 35 ரூபாயும், உயர்த்தி வழங்கவேண்டும் என, பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மாநாட்டில்,

200க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர். மாநாட்டில், மாவட்ட தலைவர் பழனிச்சாமி, மாவட்டக்குழு உறுப்பினர் தட்சிணாமூர்த்தி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நகர செயலாளர் அருள் ஆரோக்கியம், ஏ.ஐ.டி.யு.சி., போக்குவரத்து கழக மாவட்ட பொதுச்செயலாளர்கள் திருச்சி சுப்பிரமணியன், புதுக்கோட்டை சுப்பிரமணியன், ஏ.ஐ.ஒய்.எஃப் மாவட்ட செயலாளர் அப்துல்காதர் ஆகியோர் பேசினர்.சங்க தாலுகா செயலாளர் வீரமணி நன்றி கூறினார்.

எகிறிய வாழைத்தார்; சரிந்த வெற்றிலை

வேலாயுதம்பாளையம்: திருமணம் உள்ளிட்ட சுப விஷேசங்களை முன்னிட்டு, வாழைத்தாரின் விலை ஜெட் வேகத்தில் உயர்ந்து வருகிறது. ஆனால், வெற்றிலையின் விலை நாளுக்கு நாள் சரிந்து வருகிறது. கரூர் மாவட்டம் நொய்யல், நடையனூர், சேமங்கி, முத்தனூர், காடுத்துறை, என்.புகளூர், தவுட்டுபாளையம், பாலத்துறை, புன்செய் புகளூர், கடம்பங்குறிச்சி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் பல்வேறு விதமாக வாழைகள் சாகுபடி செய்யப்படுகிறது. அப்பகுதிகளில் விளையும் வாழைத்தார்கள், பரமத்தி வேலூரில் செயல்பட்டு வரும் தினசரி வாழைத்தார் ஏல மார்க்கெட்டுக்கும், கடைகளுக்கும் கொண்டு சென்று விவசாயிகள் விற்பனை செய் கின்றனர். கடந்த வாரம் 350 ரூபாய்க்கு விற்ற பூவன் வாழைத்தார் 400 ரூபாய்க்கும், 450 ரூபாய்க்கு விற்ற ரஸ்தாலி 550 ரூபாய்க்கும், 400 ரூபாய்க்கு விற்ற பச்சைநாடான் 500 ரூபாய்க்கும், 400 ரூபாய்க்கு விற்ற கற்பூரவள்ளி 450 ரூபாய்க்கும் விலை போனது. தினசரி மார்க்கெட்டுக்கு வியாபாரிகள் அதிக அளவில் வந்த போதிலும், வாழைத்தார் வரத்து குறைவாக வந்ததால் விலை உயர்வு ஏற்பட்டது.

* கரூர் மாவட்டம் புங்கோட்டை, சேமங்கி, முத்தனூர், நடையனூர், கோம்பு பாளையம், புகளூர், தவுட்டுப் பாளையம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஆயிரக்க ணக்கான ஏக்கரில் வெள்ளக் கொடி, கற்பூரி ஆகிய வெற்றிலைகள் சாகுபடி செய்யப் படுகிறது. இப்பகுதிகளில் விளையும் வெற்றிலைகளை உள்ளூர் பகுதிகளில் செயல்பட்டு வரும் வெற்றிலை ஏல மார்க்கெட்டிற்கும் கொண்டு வருகின்றனர். கடந்த வாரம் நடந்த ஏலத்தில் 104 கவுளி கொண்ட ஒரு சுமை இளங்கால் வெள்ளிக்கொடி வெற்றிலை 3,000 ரூபாய்க்கு விற்றது. நடப்பு

வாரத்தில் 2,500 ரூபாயாக குறைந்தது. முதிகால் வெள்ளிக்கொடி வெற்றிலை 2,000 ரூபாயில் இருந்து 1,500 ரூபாய்க்கும், இளங்கால் கற்பூரி வெற்றிலை 3,500 ரூபாயில் இருந்து 1,500 ரூபாய்க்கும், முதிகால் கற்பூரி வெற்றிலை 2,000 ரூபாயில் இருந்து 1,700 ரூபாய்க்கு விலை குறைந்து ஏலம் போனது. இதனால், வெற்றிலை பயிரிட்டுள்ள விவசாயிகள் பெரும் கவலை அடைந்துள் ளனர்.'

தேவைக்கு போக மீதமாகும் பஞ்சைஏற்றுமதி செய்ய சைமா வலியுறுத்தல்

திருப்பூர்:"பஞ்சு ஏற்றுமதிக்கான ஊக்கத்தொகையை ரத்து செய்ய வேண்டும்; உள்நாட்டு தேவைக்கு போக மீதமாகும் பஞ்சை மட்டும் ஏற்றுமதி செய்ய வேண்டும்' என, திருப்பூர் "சைமா' சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.
"சைமா' தலைவர் ஈஸ்வரன் வெளியிட்டுள்ள அறிக்கை:பஞ்சு ஏற்றுமதியை கட்டுப்படுத்தி, உள்நாட்டு கைத்தறி, விசைத்தறி மற்றும் பின்னலாடை உற்பத்திக்கு போக மீதமாகும் பஞ்சை மட்டும் ஏற்றுமதி செய்ய வேண்டும் என மத்திய அரசிடம் தொடர்ந்து கோரிக்கை வைக்கப்பட்டது.
இக்கோரிக்கையை ஏற்று, வெளிநாட்டு வர்த்தகத்துறை பருத்தி மற்றும் பருத்தி நூல் ஏற்றுமதிக்கு வழங்கி வந்த மூன்று சதவீத ஊக்கத்தொகையை, கடந்த செப்., மாத இறுதியில் ரத்து செய்தது.கடந்த பருத்தி சீசன் நிறைவடையும் தருவாயில், இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டதால், பின்னலாடை உற்பத்தியாளர்கள் கொள்முதல் செய்த நூல் விலையில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. தற்போது புதிய சீசன் துவங்கியுள்ளதையடுத்து, பருத்தி வரத்து துவங்கியுள்ளது.
இந்திய பருத்தி கழகம், நடப்பு பருத்தி பருவத்தில் 360 லட்சம் பேல் வரை பருத்தி பஞ்சு சந்தைக்கு வரும் என மதிப்பீடு செய்துள்ளது. இந்த மதிப்பீட்டை அடிப்படையாக கொண்டு, பஞ்சு ஏற்றுமதிக்கு வழங்கி வந்த ஊக்கத்தொகையை மீண்டும் பெற்றுத்தர ஜவுளித்துறை அமைச்சகம் முயற்சித்து வருகிறது. இதனால், உள்நாட்டு தேவையை கருத்தில் கொள்ளாமல், பஞ்சு ஏற்றுமதி அதிகரிக்க வாய்ப்புள்ளது.

பஞ்சு ஏற்றுமதி அதிகரித்தால், உள்நாட்டில் நூல் விலை அபரிமிதமாக உயர்ந்து, ஒட்டு மொத்த ஜவுளித்துறைக்கும் சவாலாகி விடும். மூலப்பொருளை ஏற்றுமதி செய்வதைவிட, மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களாக ஏற்றுமதி செய்யும்போது, அதிகளவு அன்னிய செலாவணி பெற முடியும்.பருத்திக்கு கட்டுப்படியாகும் விலையை மத்திய அரசு நிர்ணயிக்க வேண்டும்; உள்நாட்டு தேவையான 280 லட்சம் பேல் வந்தபின், மீதமாகும் பஞ்சை மட்டும், மாதம் 5 லட்சம் பேல் என்ற அடிப்படையில் ஏற்றுமதி செய்ய அனுமதிக்க வேண்டும். அப்போதுதான், பஞ்சு, நூல் விலை சீராக இருக்கும்.இவ்வாறு, அவர் கூறியுள்ளார்.

## கடலூரில் 1ம் எண் புயல் கூண்டு ஏற்றம்

முதுநகர்: வங்கக்கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், புயலாக மாறக்கூடிய வாய்ப்பு உள்ளதையொட்டி, கடலூர் துறைமுகத்தில், நேற்று, 1ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டது.
வங்கக்கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக, தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில், கடந்த சில நாட்களாக, மழை பெய்து வருகிறது. சென்னைக்கு தென்கிழக்கே, 530 கி.மீ., தொலைவில் மையம் கொண்டுள்ள இந்த குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை, நேற்று குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவடைந்தது. தொடர்ந்து, கடலூர் துறைமுகத்தில், நேற்று மதியம், 12:30 மணிக்கு, தூர முன்னறிவிப்பு மற்றும் புயல் உருவாகக் கூடிய, திடீர் காற்றோடு மழை பெய்யும் வானிலையைக் குறிக்கும் வகையில், 1ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டது. "குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், வடக்கு அல்லது வடகிழக்கு திசையை நோக்கி நகர்ந்து, இன்று, 7ம் தேதி தீவிர காற்றழுத்த தாழ்வு நிலையாக மாற்றமடையக் கூடும். தொடர்ந்து, புயலாக மாறக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது' என, வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது. குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக, வழக்கத்தை விட நேற்று, கடல் சீற்றம் அதிகரித்து காணப்பட்டது.

மழை செழிப்பு: விவசாயிகளுக்கு அதிக கடன்?

புதுடில்லி: "பருவ மழை எதிர்பார்த்த அளவு பெய்துள்ளதால், விவசாயிகளுக்கு, நிதி நிறுவனங்கள் அதிக கடன் வழங்க வேண்டும்," என, மத்திய நிதித்துறை இணை அமைச்சர் சீலம் கூறியுள்ளார். மேலும், அவர் கூறுகையில்,"அதிக கடன் வழங்கும் பட்சத்தில், வரும் பட்ஜெட்டில் இதற்காக நிதி ஒதுக்கீட்டை அதிகரிக்க திட்டமிட்டுள்ளோம்," என்றார்.

## பருத்தி உற்பத்தி 375 லட்சம் பொதிகளாக இருக்கும்:பஞ்சாலை துறையினர் நம்பிக்கை



கோவை:சென்ற பருத்தி பருவத்தில் (அக்., – செப்.,), நாட்டின் பருத்தி உற்பத்தி, 375 லட்சம் பொதிகளாக (1 பொதி –170 கிலோ) இருக்கும் என, பஞ்சாலைத்துறையினர் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.நாடு முழுவதும் தற்போது 3,500க்கும் மேற்பட்ட பஞ்சாலைகள் செயல்படுகின்றன. இந்தியாவில், பருத்தி பருவம், அக்., முதல் செப்., வரையிலும், சர்வதேச அளவில் ஜூலை முதல் ஜூன் வரையிலும் கணக்கிடப்படுகிறது.

**நூலிழை உற்பத்தி:**கடந்த, 1980 – -85 காலகட்டத்தில், 2.5 கோடியாக இருந்த நூற்புக் கதிர்களின் எண்ணிக்கை, தற்போது, 50 கோடியாக உயர்ந்துள்ளது. இதே காலத்தில், நூலிழை உற்பத்தி, 3.5 மடங்கு அதிகரித்து, 106.70 கோடி கிலோவில் இருந்து, 400 கோடி கிலோவாக உயர்ந்துள்ளது.இந்தியாவில், பருத்தி சீசன் அக்., முதல் செப்., என்றபோதும், டிச., முதல் மார்ச் வரையிலான காலகட்டத்தில் தான்

பருத்தி விளைச்சல் அதிகம் காணப்படும்; சந்தையிலும் பருத்தி வரத்து அதிகம் இருக்கும்.

பன்னாட்டு நிறுவனங்கள், ஒட்டு மொத்தமாக ஒரு ஆண்டுக்குத் தேவைப்படும் அளவுக்கு, 70 சதவீத பருத்தியை கொள்முதல் செய்துவிடுகின்றன.இதனால், உள்நாட்டு பஞ்சாலைத்துறையினர் கடுமையாக பாதிக்கப்படுகின்றனர்.பருத்திக்கு நிலையான கொள்கை வேண்டும், வட்டி சலுகை அளிக்க வேண்டும், வரம்புத் தொகையை 10 சதவீதமாக குறைக்க வேண்டும் என, பல்வேறு கோரிக்கைகளை பஞ்சாலைத்துறையினர் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

பல்வேறு நெருக்கடிகள் உள்ளபோதும், இவ்வாண்டு பருத்தி சீசன் நன்றாக இருந்ததால், அண்மையில் முடிவுற்ற பருவத்தில், 375 லட்சம் பருத்தி பொதிகள் உற்பத்தி செய்யப்படும்என, பஞ்சாலைத்துறையினர் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

தென்னிந்திய மில்கள் சங்க கவுரவ செயலர் செல்வராஜ் கூறியதாவது:சிட்டா நூல் கண்காணிப்பு கமிட்டி மற்றும் கைத்தறிக்கான தனி ஒதுக்கீடு சட்டம் வரவேற்கத்தக்கது. இருந்தபோதிலும், இன்றைய சூழலுக்கு அவை ஏற்புடையதல்ல. இவை இரண்டையும் ரத்து செய்ய, மத்திய அரசை கடந்த 2008ம் ஆண்டு முதல் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்; இருப்பினும் நடவடிக்கை இல்லை.

**வட்டி விகிதம்**:வட்டி விகிதத்தில் தள்ளுபடி, வரம்புத் தொகையை, 10 சதவீதமாக குறைத்தல் உள்ளிட்ட பல்வேறு சலுகைகளை அளித்தால், நான்கு ஆண்டுகளுக்கு மத்தியஅரசுக்கு, 3,600 கோடிரூபாய் நிதிச்சுமை ஏற்படும்.அதே சமயம், தற்போது 6 – 8 சதவீதமாக உள்ள தொழில்துறை வளர்ச்சி, 10 சதவீதமாக உயர வாய்ப்பு ஏற்படும். நேரடியாகவும், மறைமுகமாகவும், கூடுதலாக 2 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.இவ்வாறு, அவர் தெரிவித்தார்.

## கடுங்குளிரால் முட்டைக்கு தேவை அதிகரிப்பு:10 நாட்களாக விலையில் மாற்றமில்லை



நாமக்கல்:

வடமாநிலங்களில், கடுங்குளிர் மற்றும் சீதோஷ்ண நிலையில் மாற்றம் ஏற்பட்டு உள்ளதால், முட்டைக்கான தேவை அதிகரித்துள்ளது.

**ஆந்திரா**:அதனால், அதிகபட்ச விலையில் எவ்வித மாற்றமும் செய்யாமல், பத்து நாட்களுக்கு மேலாக, ஒரே மாதிரியான விலையை, முட்டை மண்டலங்கள் நிலை நிறுத்தியுள்ளன.தேசிய அளவிலான முட்டை உற்பத்தியில், அதிகபட்சமாக ஆந்திரா, 30 சதவீதம், தமிழகம், 20 சதவீதம், மகாராஷ்டிரா, அரியானா, பஞ்சாப், மேற்குவங்கம் ஆகியவை, தலா, 10 சதவீதம், கர்நாடகா, கேரளா, ஒடிசா ஆகிய மாநிலங்கள், தலா, 5 சதவீதம் என்ற அளவில், முட்டை உற்பத்தி மேற்கொள்கின்றன.அந்தந்த பகுதியில் உள்ள தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் பரிந்துரைபடி, முட்டையின் பண்ணை மற்றும் கொள்முதல் விலை நிர்ணயிக்கப்படுகிறது.வடகிழக்கு பருவமழை சீஸன், குளிர்கால சீதோஷ்ண நிலை, கிறிஸ்துமஸ், ஆங்கில புத்தாண்டு ஆகிய காரணங்களால், முட்டைக்கு தேவை அதிகரித்துள்ளது. அதனால், முட்டை மண்டலங்கள், பத்து நாட்களுக்கு முன் நிர்ணயிக்கப்பட்ட கொள்முதல் விலையை, அப்படியே நிலை நிறுத்தியுள்ளன. இதன்படி, நவம்பர், 27ம் தேதி, அகமதாபாத், புனே மற்றும் மும்பை ஆகிய முட்டை மண்டலம் நிர்ணயித்த, 428 காசு, 26ம் தேதி, பெங்களூரு முட்டை மண்டலம் நிர்ணயித்த, 392 காசு, 27ம் தேதி, கோதாவரி, விஜயவாடா மற்றும் ஐதராபாத் முட்டை மண்டலம் நிர்ணயித்த, 391 காசு, வாரங்கல் முட்டை மண்டலம் நிர்ணயித்த, 395 காசு, 25ம் தேதி, நாமக்கல் முட்டை மண்டலம் நிர்ணயித்த, 403 காசு என, அதிகபட்ச உச்ச விலையே, நீடிக்கிறது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**இரும்புஆலை முன் விவசாயிகள் கால்நடைகளுடன் முற்றுகை**

பல்லடம், : திருப்பூர் மாவட்டம் பல்லடத்தை அடுத்துள்ள கள்ளிப்பாளையம் ஊராட்சியில் சுமார் 2000த்திற்கும் மேற்பட்டோர் வசித்து வருகின்றனர். இப்பகுதியில் விவசாயம் மற்றும் கால்நடை வளர்த்தல் பிரதான தொழிலாக உள்ளது.

இந்நிலையில், இப்பகுதியில் 2 வருடங்களுக்கு முன்பு தனியாருக்கு சொந்தமான இரும்பு உருக்கும் தொழிற்சாலை தொடங்கப்பட்டது.

ஆரம்பகாலத்தில் இரும்பு உருக்கும் போது ஏற்படும் நச்சுதன்மை வாய்ந்த புகையை வடிகட்டி ராட்சத குழாய் மூலம் வெளியேற்றி வந்தனர்.ஆரம்பத்தில் பாதுகாப்பான முறையில் நச்சுப்புகையை வெளியேற்றி வந்த ஆலை நிர்வாகம் நாளடைவில் புகைகளை வடிகட்டாமல் இரும்பு துகள்களுடன் கரும்புகையை வெளிவிட ஆரம்பித்தது. இதிலிருந்து வெளிவரும் இரும்புதுகள்கள்ஆலையை சுற்றியுள்ள 6கிலோ மீட்டர் சுற்றளவு பகுதியில் உள்ள விவசாய நிலங்களில் கருப்பாக படிந்துள்ளது.

இதனால் தக்காளி,வங்காயம்,கத்தரி உள்ளிட்ட எந்தஒரு சாகுபடியும் செய்யமுடியாத அளவுக்கு அந்த இரும்புதுகள்கள் செடிகள் மீது படிந்து விடுவதாக கூறிவருகின்றனர். மேலும், அதை உண்ணும் கால்நடைகளுக்கு பலவிதமான நோய்கள் வருவதாகவும் கூறுகின்றனர். இதுகுறித்து இரும்பு ஆலை நிர்வாகத்திடம் பலமுறை முறையிட்டும் இதுவரை எந்தஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை மீண்டும் ஆலை நிர்வாகம் அதேபோல் தான் நச்சுபுகையை

வெளிவிடுவதாக கூறிவருகின்றனர்.
இந்நிலையில், நேற்று பொது மக்கள் ஆண்க ள்,பெண்கள் உள்பட 20க்கும் மேற்பட்டோர் ஆடு,மாடுகளுடன் தனியாருக்கு சொந்தமான இரும்பு ஆலை முன்பு முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்டனர். இதுகுறித்து தகவல் அறிந்து காமநாயகன்பாளையம் கவல்துறையினர் மற்றும் வருவாய்துறையினர் சம்பவ இடம் விறைந்து சென்று ஆலை நிர்வாகத்திடமும் விவசாயிகளிடமும் பேச்சுவார்த்தை நடத்தினர்.
இதுகுறித்து அப்பகுதி விவசாயிகளிடம் கேட்டபோது: நாங்கள் இந்த ஆலையை சுற்றியுள்ள பகுதியில் வசிக்கிறோம். இந்நிலையில், இந்த ஆலையில் இருந்து வெளிவரும் நச்சுபுகையை சுவாசிக்கும் பொதுமக்கள் மற்றும் குழந்தைகளுக்கு மூச்சு திணற ல்,ஆஸ் துமா, இருதயகோளாறு போன்ற வியாதிகள் ஏற்படுகிறது. மேலும், இந்த கருப்பு துகள்கள் மழை காலங்களில் கரைந்து பூமிக்கடியில் சென்று நிலத்தடிநீர் மாசுபடுகிறது. தமிழக அரசு இந்த பிரச்னைக்கு உடனடி தீர்வு காணவேண்டும் தவறும் பட்சத்தில் இப்பகுதியில் உள்ள விவசாயிகளை திரட்டி மிகப்பெரிய போராட்டம் நடத்தபோவதாக பொதுமக்கள் தெரிவித்தனர்.
இதுகுறித்து ஆலை நிர்வாகத்திடம் கேட்டபோது, அரசு விதிமுறைகளின்படித்தான் ஆலை செயல்பட்டு வருகிறது தற்போது விவசாயிகளின் கூறியுள்ள புகார் குறித்து கவனத்தில் கொள்ளப்படும் என தெரிவித்தனர்.

**அறுவடை நெற்பயிர் கருகும் அபாயம்**

உடுமலை,; உடுமலை அருகே உள்ள அமராவதி அணையில் இருந்து கல்லாபுரம்,ராமகுளம் வாய்க்கால் மூலம் 3600க்கும் மேற்பட்ட நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. வழக்கமாக இப்பகுதியில் 2 போகம் நெல் சாகுபடி நடக்கும். அணையில் போதிய தண்ணீர் இல்லாததால் கடந்த 2 ஆண்டுகளாக நெல் சாகுபடி நடைபெற வில்லை. கடந்த சில மாதங்களுக்கு முன்பு பெய்த தென்மேற்கு பருவமழையால் அணையில் நீர் நிரம்பியதையடுத்து இப்பகுதியில் 1200 ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்பட்டது. தற்போது அறுவடை நடந்து கொண்டிருக்கிறது. இதுவரை 800 ஏக்கரில் அறுவடை முடிந்து விட்டது, மீதி 400 ஏக்கரில் நெல்

விளையும் பருவத்தில் உள்ளது.

இந்நிலையில் தற்போது அணையின் நீர்மட்டம் 32 அடியாக குறைந்து விட்ட து. ஆற்றிலும், பிரதாக கால்வாயிலும் தண்ணீர் திறக்கப்பட்டதால் நீர்மட்டம் சரிந்தது. இதனால் கல்லாபுரம், ராமகுளம் வாய்க் காலுக்கு தண்ணீர் வருவது தடைபட்டுள்ளது. அறுவடைக்கு இன்னும் சிறிது நாட்களே உள்ள நிலையில் 400 ஏக்கர் நெற்ப யிரை காக்க கல்லாபும், ராமகுளம் வாய்க்காலுக்கு தண்ணீரை திருப்பி விட வேண்டுமென அதிகாரிகளை விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர். இதற்கிடையில் பிரதான கால்வாயில் நேற்று முன்தினம் தண்ணீர் திறப்பு நிறுத்தப்பட்டு விட்டது.

தற்போது  அணையின் நீர்மட்டம் 32 அடி, வரவு 323 கனஅடி, வெளியேற்றம்-ஆற்றில் 400 கனஅடி.

**அலங்காநல்லூர் சர்க்கரை ஆலையில் கரும்பு அரவை துவக்கம்**

அலங்காநல்லூர், :  அலங்காநல்லூர் தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலையில் நேற்று 2013-14ம் ஆண்டுக்கான கரும்பு அரவை துவங்கியது.மதுரை மாவட்டம் அலங்காநல்லூரில் உள்ள தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 2013-14ம் ஆண்டுக்கான கரும்பு அரவை நேற்று துவங்கியது. மதுரை, திண்டுக்கல், விருதுநகர் உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து அறுவடை செய்யப்பட்ட கரும்புகள் ஆலையின் அரவை பகுதி க்கு கொண்டு வரப்பட்டு விக்கப்பட்டிருந்தன. நிகழ்ச்சிக்கு கலெக்டர் சுப்பிரமணியன் தலைமை வகித்தார். ஆலையின் சேர்மன் ராம்குமார், எம்எல்ஏக்கள் கருப்பையா, தமிழரசன், சாமி ஆகியோர் முன்னிலை வகித்து கரும்பு கட்டுகளை இயந்திரத்தில் எடுத்து போட்டு அரவை யை துவக்கி வைத்தனர்.நிகழ்ச்சியில் தமிழக அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஜக்கையன், மாவட்ட ஊராட்சி தலைவர் தர்மராஜ், அலங்காநல்லூர் பேரூராட்சி தலைவர் கீதாபாலாஜி, அலங்காநல்லூர் ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன், விவசாய சங்க நிர்வாகிகள் பழனிச்சாமி, நல்லமணிகாந்தி, ஊராட்சி தலைவர்கள் மாரிமுத்து,

வசந்தி பன்னீர்செல்வம், முருகன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

ஆலையின் மேலாண்மை இயக்குநர் செம்புகுட்டி கூறுகையில், “இந்த ஆண்டு ஒரு லட்சத்து 30 ஆயிரம் டன் கரும்பு அரவை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கடந்த நவ.15ம் தேதி ஆலையில் கொதிகலன் சூடேற்றும் நிகழ்ச்சி நடந்தது. கடந்த ஆண்டு கரும்பு டன்னுக்கு ரூ.2 ஆயிரத்து 339 வழங்கப்பட்டது. இந்த ஆண்டு கரும்பு டன்னுக்கு ரூ.2 ஆயிரத்து 500ஆக உயர்த்தி அரசு அறிவித்துள்ளது. கரும்பின் பிழிதிறனை பொறுத்து இந்த தொகை விவசாயிகளுக்கு வழங்கப்படும்“ என்றார்.

**சர்வதேச விவசாய கண்காட்சி மாநகரில் இன்று துவங்குகிறது**

கோவை, : கோவை சிங்காநல்லூர் உழவர் சந்தை அருகில் உள்ள விஜயா கண்காட்சி வளாகத்தில் 3 வது சர்வதேச விவசாயம் மற்றும் தோட்டக்கலை கண்காட்சி இன்று (7ம் தேதி) முதல் 8ம் தேதி வரை 4 நாட்கள் நடைபெறுகிறது. 120க்கும் மேற்பட்ட அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

அதிநவீன வேளாண் இயந்திரங்கள், டிராக்டர் கள், அறுவடை இயந்திரங் கள், உணவுப் பதப்படுத்தும் இயந்திரங்கள், தோட்டக்கலை கருவிகள், அதிக மகசூல் தரும் பயிர் வகைகள், நீர்ப்பாசன கருவிகள், பூச்சிக் கொல்லி மருந்துகள், ஊட்டச்சத்து மிக்க மாட்டுத் தீவனம், சோளத் தட்டு மற்றும் வைக்கோல் ஆகியவற்றை சேகரிக்கும் பேலர் இயந்திரம், களை எடுக்கும் கருவிகள் உள்ளிட்டவை கண்காட்சி அரங்குகளில் வைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், தமிழ்நாடு விவசாய இடுபொருள் சங் கம் ஆதரவுடன் நடக்கும் இக்கண்காட்சியில் நாளை (7ம் தேதி) கருத்தரங்கும் 7ம் தேதி தேசிய அளவிலான டீலர்கள் சந்திப்பும் நடைபெற உள்ளது.

அதிக மகசூல், புதிய கண்டுபிடிப்பு, வியக்கத்தக்க வளர்ச்சியடைந்த காய்கனிகள் மற்றும் கால்நடை கள் கொண்டு வரும் விவசாயிகளுக்கு சிறப்பு பரிசு வழங்கப்படும். கோவை மாநகரின் முக்கிய இடங்களில் இருந்து கண்காட்சி

வளாகத்திற்கு இலவச வேன் வசதி செய்யப்பட்டுள்ளதாக கண்காட்சி ஏற்பாட்டாளர்கள் பாலசுந்தரம், ராமலிங்கம் தெரிவித்தனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை கடலூர் துறைமுகத்தில் 1–ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டது**



கடலூர் முதுநகர்,

வங்கக்கடலில் உருவான புதிய காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக கடலூர் துறைமுகத்தில் 1–ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டது.

<u>புயல்சின்னமாக மாற வாய்ப்பு</u>

வடகிழக்கு பருவமழை தொடங்கியதை அடுத்து கடலூரில் பரவலாக மழை பெய்து வருகிறது. தொடர்ந்து வங்கக்கடலில் கடந்த சில நாட்களுக்கு முன் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியது. அது காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறியதை தொடர்ந்து, தீவிர காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறும் என வானிலை மையம் அறிவித்துள்ளது. மேலும், வலுவடைந்து புயல்சின்னமாக மாறவும் வாய்ப்பு உள்ளது.தற்போது, இந்த தாழ்வு மண்டலம் சென்னைக்கு தென்கிழக்கே 530 கிலோ மீட்டர் தொலைவில் வங்கக்கடலில் மையம் கொண்டுள்ளது. இதையடுத்து அது வடக்கு, வடக்கிழக்கு திசையில் நகரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், கடலூர் மாவட்டத்தில் அநேக இடங்களில்

பரவலாக மழை பெய்ய வாய்ப்பு உண்டு என வானிலை ஆய்வு மையம் அறிவித்து உள்ளது.

<u>புயல் கூண்டு</u>

அதன்படி, நேற்று கடலூரில் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. மேலும், தேவனாம்பட்டினம் மற்றும் துறைமுகப்பகுதிகளில் கடல் சீற்றம் அதிகமாக இருந்தது. இந்த நிலையில், கடலூர் துறைமுகத்தில் 1–ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டது. மேலும், கடல் சீற்றம் அதிகமாக இருப்பதால் 2–வது நாளாக மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க செல்லவில்லை.சிதம்பரம், விருத்தாசலம் என மாவட்டம் முழுவதும் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. மேலும், கடலூரில் வழக்கத்தை விட பனி அதிகமாக இருந்தது.

**வங்க கடலில் உருவான புயல் சின்னம் தீவிரம் மியான்மர் நோக்கி செல்ல வாய்ப்பு**



சென்னை,

வங்க கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி, தீவிரம் அடைந்து தாழ்வு மண்டலமாக மாறியது

சென்னை,

வங்க கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி, மேலும் தீவிரம் அடைந்து புயலாக மாறுகிறது என்றும், அது மியான்மர் நோக்கி செல்கிறது என்றும் வானிலை மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

<u>வடகிழக்கு பருவ மழை</u>

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை காலம் முடிய இன்னும் 3 வாரங்கள் மட்டுமே உள்ளன. இதுவரை 60 சதவீத மழைதான் பெய்துள்ளது. இந்த நிலையில் வங்க கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுநிலை உருவானது.

அது வலுப்பெற்று கடந்த 3 நாட்களுக்கு முன்பே தாழ்வு பகுதியாக மாறியது. அது மேலும் தீவிரம் அடைந்து நேற்று குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறியுள்ளது. இதை புயல் சின்னம் என்று அழைக்கலாம்.

இந்த புயல் சின்னம் குறித்து சென்னை வானிலை மண்டல ஆராய்ச்சி இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் கூறியதாவது:–

புயல்

வங்க கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி தீவிரம் அடைந்து தாழ்வு மண்டலமாக மாறியுள்ளது. இது சென்னையில் இருந்து தென்கிழக்கில் 530 கிலோ மீட்டர் தூரத்தில் நிலை கொண்டுள்ளது. அது அடுத்த 24 மணி நேரத்தில் மேலும் தீவிரம் அடைந்து தீவிர காற்றழுத்த தாழ்வு மண்டலமாகவும், அதே நேரத்தில் புயலாகவும் மாற வாய்ப்பு உள்ளது.

ஆனால் இந்த புயலால் தமிழ்நாட்டுக்கோ, ஆந்திராவுக்கோ மழையை கொடுக்க முடியாது.இது வடக்கு மற்றும் வடகிழக்கு நோக்கி நகரும். அதாவது மியான்மர் நோக்கி செல்ல வாய்ப்பு இருக்கிறது.

சில இடங்களில் மழை பெய்யும்

தமிழ்நாட்டில் கடலோர மாவட்டங்களில் நாளை(சனிக்கிழமை) சில இடங்களில் மழை பெய்யும். உள் மாவட்டங்களில் வறண்ட வானிலை நிலவும்.

இன்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பெரியகுளத்தில் 7 செ.மீ. மழையும், நாகப்பட்டினத்தில் 5 செ.மீ. மழையும், காரைக்காலில் 3 செ.மீ.

மழையும், திருத்துறைப்பூண்டியில் 2 செ.மீ. மழையும், வேதாரண்யம், திருவாரூர் ஆகியவற்றில் தலா ஒரு செ.மீ. மழையும் பெய்துள்ளது.

இவ்வாறு எஸ்.ஆர்.ரமணன் தெரிவித்தார்.

**வரலாறு காணாத அளவில் ஐரோப்பிய நாடுகளில் கடும் புயல்; 4 பேர் பலி**



லண்டன்

ஐரோப்பாவில் உள்ள இங்கிலாந்து, ஜெர்மனி, நெதர்லாந்து நாடுகளை பலத்த சூறாவளி(புயல்) தாக்கி கோரத்தாண்டவமாடியது.

முதலில் இங்கிலாந்தில் உள்ள ஸ்காட்லாந்தில் மணிக்கு 229 கிலோ மீட்டர்(140 மைல்) வேகத்தில் சூறாவளி வீசியது. இதில் வீட்டு கூரைகள் பறந்ததுடன் ஏராளமான மரங்கள் விழுந்தன. பிறகு புயல் நகர்ந்து மேற்கு ஜெர்மனி, வடநெதர்லாந்தை தாக்கியது. அங்கும் பெரும் சேதம் விளைவித்தது. பலத்த மழை கொட்டி வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

இதனால் பல முக்கிய நகரங்களில் ரெயில்கள், விமான போக்குவரத்து ரத்து செய்யப்பட்டன. பள்ளிக்கூடங்களுக்கு விடுமுறை விடப்பட்டது. இந்த புயல்-மழைக்கு 72 வயது பெண், லாரி டிரைவர் உள்பட 4 பேர் பலியானார்கள். ஐரோப்பிய 60 ஆண்டுகால வரலாற்றில் இது போன்று புயல் வீசியதில்லை என நிபுணர்கள் தெரிவித்தனர்.அத்னை தொடர்ந்து மீட்பு பணிகள் நடைபெற்று வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

**அரியலூரில் கோமாரி நோய் கட்டுப்படுத்துதல் - விழிப்புணர்ச்சி தொடர்பான ஆய்வு கூட்டம் கலெக்டர் தலைமையில் நட**



அரியலூர்,

அரியலூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் கோமாரி நோய் கட்டுப்படுத்துதல் மற்றும் விழிப்புணர்ச்சி தொடர் பான ஆய்வு கூட்டம் கலெக்டர் சரவண வேல்ராஜ் தலைமை யில் நடைபெற்றது.

ஆய்வுக்கூட்டம்

அரியலூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் கோமாரி நோய் கட்டுப்படுத்துதல் மற்றும் விழிப்புணர்ச்சி தொடர்பான ஆய்வு கூட்டத்தில் மாவட்ட கலெக்டர் சரவணவேல்ராஜ் தலைமை தாங்கி பேசியதாது:-

அரியலூர் மாவட்டத்தில் கோமாரி நோய் ஏற்பட்டு 16 கால்நடைகள் இறந்துள்ளது. மேலும் பல கால்நடைகள் நோய்வாய்ப்பட்டு கால்நடை மருத்துவக் குழுவினரின் தீவிர சிகிச்சையால் குணமடைந்து வருவதற்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. அரிய லூர் கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குனர் சந்திரசேகரன் தலைமையில் அரியலூர் மாவட்டத்தில் 1 லட்சத்து 54ஆயிரத்து 814 கால்நடைகளுக்கு செப்டம்பர் 21 தேதி முதல் 2 மாதங்களாக அனைத்து 201 கிராமங்களிலும் மருத்துவக் குழுவினர் மூலம் முகாம் நடத்தி தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

5 இடங்களில்...

இவையன்றி 5 இடங்களில் பொதுமக்கள் பயன்பெற ஏது வாக விழிப்புணர்வு பேனர்கள் வைக்கப்பட்டுள்ளது. நோய் வாய்ப்பட்ட கால் நடைகளுக்கு போர்க்கால அடிப்படையில் சிகிச்சை அளித்திட கால்நடை உதவி மருத்துவர்கள், ஆய்வாளர்கள் மற்றும் பராமரிப்பு உதவி யாளர்கள் அடங்கிய 10 குழுக்கள் அமைத்து தீவிர சிகிச்சை மேற்கொள்ளப்பட் டதன் மூலம் பல கால்நடைகள் தற்பொழுது குணமடைந்து வருகின்றது. மேலும் நோய் பரவுவதைத் தடுக்க கால்நடை சந்தையில் கால்நடைகள் வாங்குவது மற்றும் விற்பதை தற்காலிகமாக தவிர்த்திடவும் விவசாயிகளுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது.

கலப்பு தீவனம்

மேலும் உயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளான 4சதவீதம் கால்சியம் கார்பனேட் கரை சலை மாட்டுத்தொழுவங்க ளிலும், 4சதவீதம் கால்சியம் ஹைட்ராக்சைடு கரைசல் மற்றும் பிளிச்சீங் பவுடர் ஆகி யவைகளை கால்நடைகளின் வழித்தடங்கள் மற்றும் நீர்த் தேங்கியுள்ள பொது இடங்க ளில் கிராம பணியாளர்கள் மூலம் தெளிக்கப்பட்டு கிரா மங்கள் சுகாதாரமாக பேணப் படுகிறது. நோயுற்ற கால்நடைக ளுக்கு அரிசி, கோதுமை, கஞ்சி போன்ற மாவுப் பொருட்கள் வைப்பதால் அவை செரி மானக் கோளாறை ஏற்படுத்தி நோயினால் குணமடைந்த கால்நடைகள் இறக்கக் காரணமாகிறது. எனவே கால்நடை வளர்ப்போர் மாவு பொருட்கள் அளிப்பதை தவிர்த்து கலப்பு தீவனம் கொடுத்திட கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளனர் என மாவட்ட கலெக்டர் சரவண வேல்ராஜ் பேசினார்

கால்நடைகளின் எண்ணிக்கை

இந்த ஆய்வுக்கூட்டத்தில் அரியலூர் கால்நடை பரா மரிப்புத்துறை மண்டல இணை இயக்குனர், அரியலூர் ஆர்.டிஓ. கணபதி, உதவி இயக்குனர்- கிராம ஊராட் சிகள் அரியலூர் மற்றும் உடையார்பாளையம் கால் நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குனர்கள் பத்பநாபன், சாந்தி மற்றும் அனைத்து கால்நடை உதவி மருத்துவர்கள் கலந்து கொண்டனர். மேலும் மாவட்ட கலெக்டர்

கால்நடை மருந்தகங்கள் வாரியாக கால்நடைகளின் எண்ணிக்கை, தடுப்பூசிப்போடப்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கை, கால் வாய் நோயால் பாதிக்கப் பட்ட கால்நடைகளின் எண்ணிக்கை, நோயால் இறந்த கால்நடைகளின் எண்ணிக்கை மற்றும் மேற்கொள்ளப்பட்ட சிகிச்சை விபரம் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் ஆகிய வற்றை கால்நடை உதவி மருத் துவர்களிடம் கேட்டறிந்து அவற்றை துரிதப்படுத்திடு மாறு உத்தரவிட்டார்.

சிறப்பு கிராம சபைக் கூட்டம்

அரியலூர் மாவட்டத்தில் அனைத்து ஊராட்சிகளிலும் கால்நடைகளின் கோமாரி நோய் தடுப்பதற்கு கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகள் குறித்து விவாதிக்கும் பொருட்டு வருகிற 8-ந்தேதி (ஞாயிற்றுக்கிழமை)சிறப்பு கிராமசபா கூட்டம் நடை பெறவுள்ளது.எனவே, அந்தந்த பகுதிகளில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஊராட்சி தலைவர், மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள், ஒன்றியக்குழு தலைவர்கள், ஒன்றியக்குழு உறுப்பினர்கள், கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்கள், மகளிர் சுயஉதவிக் குழுக்கள் கால் நடை மருத்துவர்கள் மற்றும் பொதுமக்கள் பெரும் திரளாக கிராமசபைக் கூட்டத்தில் கலந்துக் கொள்ளுமாறு மாவட்ட கலெக்டர் சரவண வேல் ராஜ் கேட்டுக்கொண்டுள் ளார்.